# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

## முதலாம் வருட முதலாம் அரையாண்டிற்கான பொதுக் கலைமாணித் தேர்வு - (2017/2018) (Nov/Dec) – 2019)

## ED 1112 கல்வியியல் அடிப்படை எண்ணக்கருக்கள்

**(Basic Concepts of Education)**

நேரம் : 02 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து இரு வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து இரு வினாக்களுக்கும் மொத்தமாக நான்கு வினாக்களுக்கு மட்டும் விடைதருக.

---

## பகுதி I

1. அ. "கல்வி என்பது தனிப்பட்ட ஒரு துறையாக வடிவமைக்க முடியாது" அந்த வகையில் பரந்துபட்ட துறை என்று அழைக்கப்படுவதற்கான காரணங்கள் இரண்டு (02) கூறி மிகச்சுருக்கமாக விளக்குக?

(05 புள்ளிகள்)

ஆ. "ஓர் இடத்திற்கு பொருந்தும் கல்வி சார் விடயங்கள் பிறிதொரு இடத்திற்குப் பொருத்தமுடையதாகக் காணப்படுவதில்லை" என்பதிலிருந்து நீர் விளங்கிக்கொள்வது யாது என்பதனை நடைமுறைச் சூழல் சார் இரு உதாரணங்கள் மூலம் தெளிவுபடுத்துக?

(05 புள்ளிகள்)

இ. "மாணவனின் திறமையை முழுமையாக வெளிக்கொண்டு வருவதனை அடிப்படை நோக்கமாக்க கொண்டது கல்வி" இன்றைய நிலைப்பாட்டில் மாணவனின் திறமையானது அறிவு ரீதியாகவும், பண்பு ரீதியாகவும் வெளிக்கொண்டுவரப்படுகின்றதா என்பதை இவ்விரு உதாரணங்கள் மூலம் தெளிவுபடுத்துக ?

(10 புள்ளிகள்)

2. அ. "இலட்சியவாத ஆசிரியர் மாணவனின் உள்ளார்ந்த இலட்சியத்தினைக் கண்டறிந்து அவனுக்கேற்ப கல்வி புகட்ட வேண்டும்" என எதிர்பார்க்கப்படுகின்றது. இன்றைய கல்விச் சூழ்நிலையில் இது சாத்தியப்படுகின்றதா என்பதனை சுருக்கமாக விமர்சிக்குக?

(05 புள்ளிகள்)

ஆ. "இன்றைய நிலையில் சில ஆசிரியர்கள் தமது உயர்தொழிலுக்கான ஒழுக்கப் பண்புகளை தாமே இழிவுபடுத்திக் கொள்கின்றனர்" இச்செயற்பாடுகளை ஆசிரியர்கள் மத்தியில் குறைப்பதற்கு நீர் முன்வைக்கும் பரிந்துரைகள் மூன்றினைப் (03) பகுப்பாய்வு செய்க?

(05 புள்ளிகள்)

இ. "ஓர் உயர் தொழிலாளன் பெற்றிருக்க வேண்டிய திறன்கள் உயர்வகைத் திறன்களாகக் காணப்பட வேண்டும்" என எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த வகையில்

ஆசிரியர் தொழில் ஓர் உயர்வகைத் தொழில் என்று அழைக்கப்படுவதற்கா காரணங்களில் **தனிப்பட்ட தொழில் சுதந்திரம்** மற்றும் **அறிவுத் தளமொன்ன அடிப்படையாகக் கொண்டிருத்தல்** என்பவற்றின் முக்கியத்துவம் தொடர்பாக விளக்குக?

(10 புள்ளிகள்

3. பின்வரும் நான்கு விடயங்கள் தொடர்பான விளக்கத்தினை குறிப்பாக விளக்குக.

அ. "இலங்கையின் பாடசாலை ஒழுங்கமைப்பு"

ஆ. **"கூம்ஸ்"** என்பவரின் கல்வி நிகழ்ச்சித்திட்டம்.

இ. மகாத்மாகாந்தியின் **"Nalthaleem"** கொள்கையும் - தொடரும் கல்வியும்

ஈ. "விவேகாணந்தர் கூறும் ஒழுக்கக்கல்வி"

உ. புரோபலின் - குழந்தைப் பூங்காவின் இன்றைய நிலை.

(05 x 04 = 20 புள்ளிகள்

## பகுதி II

4. அ. பயன்பாட்டுவாத ஆசிரியர் ஒருவர் **"பிள்ளையின் வெற்றிக்கு வினைதிறன் கொண் பாடங்களைக் கற்பித்து அவனை வாழ்க்கையில் பயன்படுத்த உதவ வேண்டும்** இதற்கிணங்க நடைமுறைக் கல்விக்கொள்கையில் இருந்து நீக்கக்கூடிய பாடங்க தொடர்பாகவும், புதிதாக இணைத்துக்கொள்ளக்கூடிய பாடங்கள் தொடர்பாகவு அவற்றின் விளைவுகள் தொடர்பாகவும் கருத்துரை வழங்குக?

(15 புள்ளிகள்

ஆ. **"மனிதன் வெவ்வேறு பணிகளைச் செய்ய வேண்டி இருப்பதனால் வெவ்வே வகையான கல்வி வழங்கப்பட வேண்டும்"** என்கிறார் பிளாட்டோ இவரின் இக்கொள்ை சில பாடசாலைகளில் மாணவர்களைத் தரம் பிரித்துக்கற்பிப்பதில் அதிக தாக்க புரிகின்றதா என்பதனை விமர்சன ரீதியாக ஆராய்க?

(15 புள்ளிகள்

5. அ. பிரதானமாக கல்வி வகைப்பாடுகளை பெரும்பாலும் மூன்று வகைப்பாட்டினு அடக்கினாலும் **வேறுவகையில்பெறும் கல்வி முறைகள்** இன்று அதிகரிக்கப்பட்டுள்ளன இவற்றுள் நடைமுறையில் மிகவும் பிரபல்லியமடைந்த கல்வி வகைப்பாடுகளை வரிசைப்படுத்தி அவற்றில் வெளிவாரிக்கல்வி (External) மற்றும் தொலைக்கல் முறைகள் தொடர்பான சாதக பாதகங்களை விமர்சிக்குக?

(15 புள்ளிகள்

ஆ. இலங்கையில் இன்று அரசாங்கம் மாணவர்களின் தொழிற் தேவையை கருத்திற்கொண்டு உருவாக்கிக்கொண்டுவரும் தொழிற்பயிற்சி நிறுவனங்களின் மூல வழங்கப்படும் அனுபவக்கல்வி (NVQ) முறையின் வினைத்திறன் செயற்பாடுக தொடர்பாக பரிசீலனை செய்க?

(15 புள்ளிகள்

6. அ. பன்முகப்படுத்தலின் பின்னர் கல்விக் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களில் மாகாணக் கல்வி முறையின் தற்போதய கட்டமைப்புக்களில் மாகாணக்கல்வி அமைச்சு மற்றும் மாகாணக்கல்வித் திணைக்களம் (PED) தொடர்பாகவும் அவற்றின் இணைப்புக்கள் தொடர்பாகவும் விபரிக்குக?

(15 புள்ளிகள்)

ஆ. இலங்கையின் தற்போதய தேசிய கல்விக்கொள்கைகளின் விரிவாக்கம் ஆரம்பகாலங்களில் (அந்நிய ஆட்சிகளில்) வளர்ச்சியடைந்ததற்கும், சுதந்திரத்திற்குப் பின்னர் வளர்ச்சியடைந்ததற்கும் இடையில் உள்ள வேறுபாடுகளை ஆண்டுகள் ரீதியாக ஆதாரம் காட்டி, இன்றைய நவீன கல்விக் கொள்கைகள் வரை வரிசைப்படுத்தி மதிப்பிடுக?

(15 புள்ளிகள்)

மொத்த புள்ளிகள் : (பகுதி I) 40 + (பகுதி II) 60 = 100